## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
## 2016/ 2017 டிசம்பர் - 2019

# HYS 3223 History of the United Kingdom AD 1763 - 1945
# HYS 3223 இங்கிலாந்து வரலாறு கி.பி 1763 - 1945

நேரம் : 3 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி – I

01. "காலனித்துவ காலத்தில் சேர்க்கப்பட்ட மூலப்பொருட்களை முடிவுப் பொருட்களாக மாற்றிச் சந்தைப்படுத்தியதன் விளைவே, இங்கிலாந்தில் முதன் முதலாகக் கைத்தொழிற் புரட்சி ஏற்படுவதற்கு பிரதான காரணமாயிற்று" இக்கூற்றினை அடிப்படையாகக்கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சிக்கு வழிவகுத்த சமூகக் காரணிகள் யாவை? (10 புள்ளிகள்)

(ஆ) புரட்சியால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

02. "பிரித்தானியாவின் பரந்த சாம்ராஜ்ய உருவாக்கத்திற்கு அதன் காலனித்துவ ஆதிபத்தியமே பிரதான காரணமாயிற்று." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் நாடுகளினூடாகச் சுருக்கமாக விளக்குக.

(அ) அயர்லாந்து (10 புள்ளிகள்)

(ஆ) இந்தியா (10 புள்ளிகள்)

03. இருபதாம் நூற்றாண்டு வரலாற்றில் இடம்பெற்ற உலக யுத்தங்களை அடிப்படையாகக்கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) முதலாம் யுத்தத்தில் பிரித்தானியாவின் வகிபங்கு (10 புள்ளிகள்)

(ஆ) இரண்டாம் உலக யுத்தமும் பிரித்தானியாவின் இராஜதந்திரப் போக்கும் (10 புள்ளிகள்)

பகுதி – II

04. விக்டோரியா மகாராணியின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கம் பெற்ற இலக்கிய சமகாலத்தில் எதிர்நோக்கிய சமூக சீர்கேடுகள் கருப்பொருளாகக் கொண்டிருந்தன.” இக்கூ பொருத்தப்பாட்டினை அக்கால இலக்கியங்களினூடாக மதிப்பீடு செய்க. (20 புள்ளிக

05. வில்லியம் இவாட் கிளஸ்டன் (William Ewart Gladstone) காலத்தில் முன்னெடுக்க அரசியல், பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பில் ஒரு விபரணக் கட்டுரை எழுதுக. (20 புள்ளிக

06. இங்கிலாந்தில் கட்சிமுறையின் தோற்றத்திற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அவ விக்கட்சியின் தோற்றம், வளர்ச்சிப்போக்கு தொடர்பில் நுணுகி ஆராய்க. (20 புள்ளிக

07. “அவுஸ்திரேலியாவில் (Australia) பிரித்தானிய காலனித்துவ ஆதிபத்தியமும் ஆட்சிமுறைப் போக்கும்” என்ற தலைப்பில் ஒரு வரலாற்றுக் கட்டுரை எழுதுக. (20 புள்ளிக